DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.154/2024**

Deposition of Witness : RW2

| | | | |
|---|---|---|---|
| Name : | மாரிமுத்து. | Father's Name : | |
| Village : | | Taluk : | |
| Caste : | | Calling : | |
| Religion : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 10.07.2026

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 12.17 பி.ப

நான் தற்பொழுது தேனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கணக்காளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு தேனி வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வரப்பெற்ற அழைப்பாணையின்படி, தேனி வட்டார போக்குவரத்து அலுவலர் சார்பாக சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு உரிய அதிகார கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த அதிகார கடிதம் **சா.சா.1**. ஆண்டிபட்டி தாலுாக சித்தார்பட்டி கிராமம், வடக்கு கிருஷ்ணன் கோவில் தெருவில் வசிக்கும் தங்கராஜ் குமாரர் தவமணி என்பவருக்கு கடந்த 01.02.2024ம் தேதியில் பொது சாலையில் ஹியருடன் கூடிய மோட்டார் சைக்கிள் வாகனத்தை ஓட்டுவதற்கு எங்களது அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படவில்லை என்பதற்கான சான்று அடங்கிய கடிதம் **சா.சா.2** ஆகும்.

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநர் வேறு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் அது பற்றி எங்களுக்கு தெரியாது. ஓட்டுநரின் ஓட்டுநர் எண், பிறந்ததேதி ஆகியவை நீதிமன்ற அழைப்பாணையில் எதுவும் குறிப்பிட்டு



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:04:41 +0530

சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பல வருடங்களுக்கு முன்பு ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் அது கணினிமயமாக்கப்பட்ட பிறகு எங்களுக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய நபருக்கு எங்களுடைய அலுவலகத்தில் அவருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்கு எங்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் அவருக்கு உரிய ஓட்டுநர் எண், பிறந்த தேதி குறிப்பிடாததால் அந்த நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதற்கு நான் கண்டறியவதற்கான வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, விலாசத்தை வைத்து கூட எடுக்கலாம். பிறந்த தேதி, ஓட்டுநர் உரிமம எண் இருந்தால் மிக துல்லியமாக கூட எடுக்கலாம்.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.25 பி.ப

*Taken down by me/before me in open Court*
*interpreted read over to the witness and*
*admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.10 18:04:48 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 10.07.2026